## தியாகி சங்கரலிங்கனார் நினைவுநாள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்




**சென்னை:** தமிழகம் என்ற இந்த மாநிலம்உள்ள மட்டும் தியாகி சங்கரலிங்கனார் நினைவுகூரப்படு வார் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம் சூட்டியுள்ளார்.

தியாகி சங்கரலிங்கனாரின் நினைவு தினத்தை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கூறியிருப்பதாவது:

அக்டோபர் 13-ம் தேதி விருதுநகர் சங்கரலிங்கனார் நினைவு தினம். வீரத்தியாகியின் நினைவு நமக்கு உள்ளத்தூய்மையை, உறுதியை, தியாக சுபாவத்தைத் தருவதாக அமைய வேண்டும். 'தியாகிக்குத் தலை வணங்குவோம். தியாகத்துக்குப் பணிபுரிவோம்' என்றார் பேரறிஞர்அண்ணா. தமிழகம் என்ற இந்த மாநிலம் உள்ள மட்டும் தியாகி சங்கரலிங்கனார் நன்றியோடு நினைவுகூரப்படுவார். இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.

## 'ஆபரேஷன் அஜய்' | இஸ்ரேலில் இருந்து 28 தமிழர்கள் உள்பட மேலும் 235 இந்தியர்கள் மீட்பு



இஸ்ரேலின் டெல் அவிவ் விமான நிலையத்தில் காத்திருக்கும் இந்தியர்கள்

**புதுடெல்லி:** ‘ஆபரேஷன் அஜய்’ திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து 2-வது நாளாக இன்று 235 இந்தியர்கள் தலைநகர் டெல்லி வந்தடைந்தனர். இவர்களில் 28 பேர் தமிழர்கள். தாயகம் திரும்பியவர்களை வெளியுறவுத் துறை இணை அமைச்சர் ராஜ்குமார் ரஞ்சன் சிங் வரவேற்றார். முன்னதாக நேற்று 212 பேர் இஸ்ரேலில் இருந்து அழைத்து வரப்பட்டனர்.


இந்நிலையில், இஸ்ரேலில் உள்ள இந்தியத் தூதரகம் எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், ”அடுத்தக்கட்டமாக இந்தியா செல்ல பதிவு செய்திருந்தவர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் முகவரி மூலம் தகவல் அளிக்கப்பட்டுள்ளது. படிப்படியாக பதிவு செய்த அனைவரும் இந்தியா அனுப்பிவைக்கப்படுவார்கள்” என்று தெரிவித்துள்ளது. இஸ்ரேலில்,18,000 இந்தியர்கள் வசிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆபரேஷன் அஜய்:** காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் கடந்த 7-ம் தேதி ராக்கெட் குண்டுகளை வீசியும், துப்பாக்கி சூடு நடத்தியும் திடீர் தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் காசா பகுதியில் இஸ்ரேல் வான் தாக்குதலை நடத்தியது. காசா மீது இஸ்ரேல் போர் தொடுப்பதால், இஸ்ரேலில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்நிலையில் இஸ்ரேலில் இருந்து நாடு திரும்ப விரும்புபவர்களை, அழைத்து வர 'ஆபரேஷன் அஜய்' திட்டத்தை இந்தியா தொடங்கியது. இந்தியாவில் இருந்து சென்ற சிறப்பு விமானத்தில் முதல் கட்டமாக சுமார் 212 இந்தியர்கள் நாடுதிரும்பினர். இன்று (சனிக்கிழமை) 2 குழந்தைகள் உள்பட 235 பேர் நாடு திரும்பியுள்ளனர். இவர்களில் 28 தமிழர்களை டெல்லியில் தமிழகப் பிரதிநிதிகள் வரவேற்றனர். அவர்கள் இன்றைக்கே சென்னைக்கு அழைத்துவரப்படுகின்றனர். ஆபரேஷன் அஜய் மூலம் இந்தியர்கள் கட்டணமின்றி தாயகம் அழைத்து வரப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தீவிரவாதம் மனித நேயத்துக்கு எதிரானது: பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தல்

EVA STALIN




பி20 உச்சி மாநாட்டில் ரஷ்ய கூட்டமைப்பின் தலைவர் வேலன்டினா மத்வியன்கோவுடன், பிரதமர் மோடி பேசினார்.

**புதுடெல்லி:** ‘‘தீவிரவாதம் மனித நேயத்துக்கு எதிரானது. இது அமைதி மற்றும் சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டிய நேரம்’’ என பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

ஜி20 நாடுகளின் சபாநாயகர்கள் பங்கேற்கும் 9-வது பி20 உச்சிமாநாடு டெல்லியில் உள்ள யாசோபூமியில் நேற்று நடைபெற்றது. இதில் ஜி20 நாடுகள் பங்கேற்றன. காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங் நிஜார் கொலையில் இந்தியா மீது கனடா குற்றம் சாட்டியதை அடுத்து இரு நாடுகள் உறவில் ஏற்பட்ட விரிசல் காரணமாக கனடா இதில் பங்கேற்கவில்லை. இந்த உச்சி மாநாட்டை தொடங்கி வைத்த பிரதமர் மோடி பேசியதாவது:

இந்த உச்சி மாநாடு, உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாட்டின் மக்களின் சக்தியை கொண்டாடுவதற்கான தளம். இந்தியாவில் பி20 உச்சி மாநாட்டை நடத்துவதில் நாங்கள் பெருமையடைகிறோம். உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும், ஜனநாயகத்தின் தாயாகவும் நாங்கள் இருக்கிறோம். உலகின் மிகப் பெரிய தேர்தலை இந்தியா நடத்துகிறது. இது இந்திய நாடாளுமன்ற நடைமுறைகளில் மக்கள் வைத்துள்ள ஆழமான நம்பிக்கையை காட்டுகிறது. தேர்தல் நடைமுறைகளை, நவீன தொழில்நுட்பங்களுடன் இந்தியா இணைத்துள்ளது.

உலகில் உள்ள நாடாளுமன்றங்கள் மற்றும் சட்டமன்றங்கள், விவாதங்கள் மற்றும் ஆலோசனைகள் நடத்துவதற்கான முக்கியமான இடங்கள். இது தொடர்பான குறிப்புகள் 5 ஆயிரம் ஆண்டுகளுக்குமுன்பே இந்திய வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதில் சமுதாயநலனக்காக ஒருமித்த முடிவுகள்எடுக்கப்பட்டுள்ளன. நாம் இணைந்து செல்ல வேண்டும், ஒன்றாக ஆலோசிக்க வேண்டும் மற்றும் நம் மனம் ஒன்றுபட வேண்டும் என ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராம அளவிலான பிரச்சினைகள் பேசி தீர்க்கப்பட்டுள்ளன. தமிழ் நாட்டின் 9-ம் நூற்றாண்டுகுறிப்பு ஒன்று கிராம சபை விதிமுறைகள் விரிவாக கூறுகிறது. உறுப்பினர்களின் தகுதி நீக்கம் குறித்த விதிமுறைகள் 1200 ஆண்டு கால பழமையான குறிப்பில் இடம் பெற்றுள்ளது. இந்தியாவில் ஜகத்குரு பசவேஸ்வரா அனுபவ் மண்டபபாரம்பரியத்தை 12-ம் நூற்றாண்டிலேயே தொடங்கியுள்ளார். இதில்அனைத்து தரப்பு மக்களும் கருத்துக்களை தெரிவிக்க ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். உலகநாடுகள் பிரிந்திருந்தால், மனிதநேயம் சந்திக்கும் சவால்களுக்கு தீர்வு காணமுடியாது. உலகில் நடைபெறும் அனைத்துவிதமான தீவிரவாதமும் மனிதநேயத்துக்கு எதிரானவை. இது அமைதி மற்றும்சகோதரத்துவத்தை வளர்ப்பதற்கான நேரம். அப்போதுதான் நாம் ஒன்றிணைந்து முன்னேற முடியும். நம்பிக்கையின்மையை போக்கி மக்கள் மைய சிந்தனையுடன் நாம் முன்னேற வேண்டும்

## உலக கோப்பை வளையபந்து போட்டியில் இந்திய அணிகளுக்கு 2 பதக்கம்


5-வது உலகக் கோப்பை வளையப்பந்து போட்டிகளில் பதக்கம் வென்று சாதனை புரிந்த வீரர், வீராங்கனைகள்.

**சென்னை:** சர்வதேச வளையப்பந்து கூட்டமைப்பு மற்றும் தென்னாப்பிரிக்கா வளையப்பந்து வாரியம் ஆகியவை இணைந்து நடத்திய 5-வது உலகக் கோப்பை வளையப்பந்து போட்டிகள் தென்னாப்பிரிக்காவின் பிரிட்டோரியா மாகாணத்தில் கடந்த மாதம் 30-ம் தேதிமுதல் அக்.7 வரை நடைபெற்றது.

இப்போட்டியில் இந்திய வளையப்பந்து அணி, இந்திய சீனியர் அணி மற்றும் 23 வயதுக்கு உட்பட்ட அணி ஆகியவற்றில் ஆண்கள், பெண்கள் இரு பிரிவிலும் கலந்துகொண்டது. இந்திய சீனியர்ஆண்கள் அணியில் தமிழகத்தைச்சேர்ந்த இ.அறிவழகன், எம்.அபினேஷ், எம்.வைரமுத்து ஆகியோரும் பெண்கள் பிரிவில் ஏ.ரம்யா, கே.ஷிவானி, ஒய்.அம்பிகா ஆகியோரும் கலந்துகொண்டனர்.



அதேபோல 23 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணியில்எஸ்.சுகிவர்மன், எஸ்.கார்த்திக் ராஜா ஆகியோரும் பெண்கள் பிரிவில் டி.தக்ஷிதா, எஸ்.மகேஸ்வரி, சி.சாத்விதா ஆகியோரும் விளை யாடினர்.

நடந்து முடிந்த 5-வது உலகக் கோப்பை வளையப்பந்து போட்டியில் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்திய அணி குழுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றது. இந்திய சீனியர் அணி குழுப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றது.

சிறப்பாக விளையாடி நாட்டுக்கும், மாநிலத்துக்கும் பெருமை சேர்த்த அனைவருக்கும் தமிழ்நாடு வளையப்பந்து கழகத்தின் சேர்மன் எம்.வி.எம்.வேல்முருகன், தலைவர் சவுபாக்கியா வி.வரதராஜன், செயலாளர் டி.சங்கர், பொருளாளர் கே.அனந்தகிருஷ்ணன் மற்றும் நிர்வாகிகள் பாராட்டு தெரிவித்தனர்.

**உலக கேடட் செஸ்: இந்திய அணி விலகல்**

EVA




**புதுடெல்லி:** உலக கேடட் செஸ் போட்டியில் இருந்து இந்திய அணி விலகிக் கொண்டுள்ளது.

எகிப்து நாட்டின் ஷர்ம் எல் ஷேக் நகரில் அக்டோபர் 14-ம்தேதி (இன்று) முதல் 23-ம் தேதிவரை உலக கேடட் செஸ் போட்டி நடைபெறவுள்ளது. இதில் இந்திய அணி பங்கேற்பதாக அறிவித்திருந்தது. இந்நிலையில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் போர் காரணமாக போட்டியிலிருந்து விலகுவதாக இந்திய அணி அறிவித்துள்ளது.

வீரர், வீராங்கனைகளின் பாதுகாப்பு காரணமாக போட்டியிலிருந்து விலகுவதாக இந்தியஅணி சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.